செ.கு.எண். 106 நாள் 16.10.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – **16.10.2015**

மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. இந்த குறிக்கோளுக்கு ஏற்ப வகுக்கப்படும் அரசின் திட்டங்களையும் நல உதவிகளையும் நடைமுறைப் படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆவர். அரசு இயந்திரம் திறம்பட செயல்பட காரணமாக உள்ள அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு பல்வேறு சலுகைகளை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

மத்திய அரசு அலுவலர் மற்றும் ஓய்வூதியதாரர் ஆகியோருக்கான அகவிலைப் படியை 1.7.2015 முதல் 6 சதவீதம் உயர்த்தி மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் அகவிலைப்படியை 1.7.2015 முதல் 6 சதவீதம் உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அகவிலைப்படி உயர்வு உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள், வருவாய் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்கள், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள், ஊராட்சி உதவியாளர்கள், எழுத்தர்கள் மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைத்து அரசு அலுவலர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வினால் அரசு அலுவலர்களுக்கு ரூ.366/- முதல் ரூ.4,620/- வரையில் சம்பள உயர்வும், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.183/- முதல் ரூ.2,310/- வரை ஓய்வூதிய உயர்வும் கிடைக்கும்.

இந்த அகவிலைப்படி 1.7.2015 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும். இந்த உயர்வினால் சுமார் பதினெட்டு லட்சம் அரசு அலுவலர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் பயனடைவர். இந்த அகவிலைப்படி உயர்வின் காரணமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,501 கோடியே 24 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் மக்கள் பணியில் புதிய உத்வேகத்துடன் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள உதவும் என நான் நம்புகிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.

நாள் : 16.10.2015